<u>**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**</u>
<u>**ஸ்ரீவில்லிபுத்தூர்**</u>

**MCOP.No:** 45/2024 நாள் 23.02.2026

எ.ம.சா.1, திரு.ராமர்

**எ.ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் 13 ஆண்டுகளாக ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். பொதுவாக பேருந்தில் பயணிக்கும் நபர்களின் எண்ணிக்கையை பொறுத்து நடத்துனரால் இன்வாய்சை பராமரிப்பது உண்டு. விபத்து நாளன்று அந்த பேருந்தில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்ற வபிபரம் இன்வாய்சை பார்த்தால் தெரியும். நான் இந்த வழக்கு சம்மந்தமாக இன்வாய்சை தாக்கல் செய்யவில்லை. சம்பவ நாளில் அந்த பேருந்தில் கூட்டம் எதுவும் இல்லை என்றும் கூட்டமாக இருந்ததாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. நான் பேருந்தில் ஓட்டுநராவேன். என்னுடைய இருக்கைக்கு பின்பக்கமாக 3 சீட்டு தள்ளி தான் இடது பக்கத்தில் படிக்கட்டு உள்ளது என்றால் சரிதான். எனவே பேருந்தில் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து கொண்டு அந்த படிக்கட்டில் எத்தனை பேர் நின்று பயணம் செய்தார்கள் என்று என்னால் பார்க்க முடியாது என்று சொன்னால் அப்படியில்லை கண்ணாடிகள் மூலமாக பார்க்கமுடியும். பொதுவாக பயணிகள் ஏறுவதற்க முன்பு விசில் அடித்து பேருந்தை நிறுத்தி பயணிகளை ஏற்றிக்கொள்வதும் அது போல் பயணிகள் இறங்குவதற்கு முன்பாக விசில் அடிக்கப்பட்டு பேருந்தை நிறுத்தி பயணிகளை இறக்கவேண்டும் என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் விருதுநகர் – சிவகாசி வழிதடத்தில் அரசு பேருந்தை ஓட்டி சென்றேன். வழியில் மெப்கோ கல்லூரி, காளீஸ்வரி கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி உள்ளது என்றால் சரிதான். நான் அந்த வழிதடத்தில் பேருந்தை ஓட்டிச்சென்ற போது மேற்படி 3 கல்லூரிகளில் இருந்தும் மாணவ , மாணவிகள் பேருந்துக்காக வருவார்கள் என்றால் சரிதான். நிறைய மாணவ , மாணவிகள் பேருந்தில் வந்ததால் நடத்துநர் விசில் அடிப்பதற்கு முன்பாகவே நான் பேருந்தை இயக்கி விட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. எனவே என்னுடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் எனவே மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் தான்

விபத்து இழப்பீடு தொகை செலுத்த வேண்டும் என்றால் அது சரியல்ல. மனுதாரர்களுக்கு விபத்துஇழப்பீடு தொகை செலுத்தாமல் இருந்துகொள்ளவேண்டி விபத்து நடந்த விதத்தை நான் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 23rdday of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.